# SISHYA SCHOOL,HOSUR

CCE COORDINATOR

சிஷ்யா பள்ளி- ஒசூர்

எழுத்துத் தேர்வு-2016-2017

பாடத்தலைப்பு-தில்லையாடி வள்ளியம்மை

பாடம்:தமிழ் மதிப்பெண்:20

வகுப்பு:ஒன்பது நேரம்:50நிமிடம்

*எல்லாவினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும்.

*ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| பிரிவு : அ | படித்தல்(செய்யுள் பகுதி) | - 5மதிப்பெண்கள் |
| பிரிவு : ஆ | இலக்கியம்/தமிழ்ப் பாட நூல்கள் | - 10மதிப்பெண்கள் |
| பிரிவு : இ | எழுதுதல் | - 5மதிப்பெண்கள் |

பிரிவு : அ

**கீழ்வரும் பத்தியைப் படிக்கவும்.பின்பு கேட்கப்பட்டுள்ள பல்விடை வினாக்களுக்கு விடையளிக்கவும்.** (1*5=5)

தென்னாப்பிரிக்க நாட்டின் திருமணப்பதிவுச் சட்டப்படியும், கிறித்தவ மதச் சட்டப்படியும் நடைபெறாத திருமணம் செல்லாது என்று அந்நாட்டு உச்ச நீதிமன்றம் 1913 ஆம் ஆண்டு ஒரு தீர்ப்பை வெளியிட்டது. அத்தீர்ப்பு, அங்குக் குடியேறியிருந்த இந்தியர்கள் அனைவருக்கும் எதிராக அமைந்திருந்தது. இதனால் பாதிக்கப்பட்ட இந்தியர்கள் தமது உரிமையை மீட்க அறப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அப்போராட்டத்தினைக் காந்தியடிகள் தலைமை ஏற்று வழி நடத்தினார். போராட்டத்தின்பொழுது காந்தியடிகள் நிகழ்த்திய வீரம் செறிந்த உரை, சிறுமி வள்ளியம்மையின் மனத்தில் ஆழமாகப் பதிந்தது. காந்தியடிகளின் உரிமை முழக்கத்தினால் கவரப்பட்ட வள்ளியம்மை அறப்போராட்டத்தில் முனைப்புடன் பங்கேற்றார். 1913 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 23ஆம் நாள் வால்க்ஸ்ரஸ்ட் என்னும் இடத்தில் நடைப்பெற்ற அறப்போரில் வள்ளியம்மை கைது செய்யப்பட்டார். அவருக்கு தென்னாப்பிரிக்க நீதிமன்றம் மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தது.

**வினாக்கள்:**

1. தென்னாப்பிரிக்காவில் திருமணம் குறித்த ஆணையைப் பிறப்பித்த அமைப்பு எது? (அறிதல்)
அ)உச்ச நீதிமன்றம் ஆ)உயர் நீதிமன்றம்
இ)நாடாளு மன்றம் ஈ)ஆளுநர் மாளிகை

2. அறப் போராட்டத்திற்குத் தலைமை வகித்தவர் யார்? (தெரிதல்)
அ) நேரு ஆ) மண்டேலா
இ) காந்தியடிகள் ஈ) போஸ்

3. வள்ளியம்மை கைது செய்யப்பட்ட இடம் எது? (புரிதல்)
அ) ஜோகன்ஸ்பர்க் ஆ) வால்க்ஸ்ரஸ்ட்
இ) இல்லம் ஈ) ஆலயம்

4. வள்ளியம்மைக்கான தண்டனைக் காலம் __________ (அறிதல்)
அ)நான்கு மாதம் ஆ) ஐந்து மாதம்
இ) இரண்டு மாதம் ஈ) மூன்று மாதம்

5. வள்ளியம்மையின் சிறப்புப் பெயர் என்ன? (தெரிதல்)
அ) வீரமங்கை ஆ) தமிழ்மங்கை
இ) வேதமங்கை ஈ) வேல்மங்கை

பிரிவு : ஆ

**கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.** (2*5=10)

6.வள்ளியம்மையின் வீர வாழ்க்கையைத் தொகுத்து எழுதுக. (தெரிதல்)

7.நும் வாழ்க்கையினை தேசப்பற்றுடையதாய் எவ்வாறு கட்டமைப்பாய்? (புரிதல்)

பிரிவு : இ

**அறிக்கை எழுதுக.** (1*5=5)

8.உனது பகுதியில் நடைபெற்ற சமூக சேவை விழிப்புணர்வு விழாவைப் பற்றி அறிக்கை எழுது. (புரிதல்)

# SISHYA SCHOOL,HOSUR

சிஷ்யா பள்ளி- ஒசூர்
எழுத்துத் தேர்வு-2016-2017
பாடத்தலைப்பு- தில்லையாடி வள்ளியம்மை
விடைகள்

பாடம்:தமிழ்
வகுப்பு:ஒன்பது

மதிப்பெண்:20
நேரம்:50நிமிடம்

| Sec/Q.No | Answer | Mark | Skill | Time |
|---|---|---|---|---|
| அ) 1. | அ)உச்ச நீதிமன்றம் | 1 | அறிதல் | 1min |
| 2. | இ) காந்தியடிகள் | 1 | தெரிதல் | 1 min |
| 3. | ஆ) வால்க்ஸ்ரஸ்ட் | 1 | புரிதல் | 1 min |
| 4. | ஈ) மூன்று மாதம் | 1 | அறிதல் | 1 min |
| 5. | அ) வீரமங்கை | 1 | தெரிதல் | 1 min |
| ஆ) 6. | அறப்போர் - வீரம் செறிந்த உரை - வள்ளியம்மையின் வீரம் -மூன்று மாத கடுங்காவல் தண்டனை- கல்லும் மண்ணும் கலந்த உணவு - காய்ச்சல் - உடல்மெலிவு - உடல் தளர்வு உள்ளம் தளரா நிலை -இந்தியர் நலனுக்காக இன்னுயிரையும் தருவேன். | 5 | தெரிதல் | 15 |
| 7. | தன் கருத்துகளை சொந்தமாக எழுதுதல் | 5 | புரிதல் | 15 |
| இ. 8. | *தலைப்பு<br>*கட்டம்<br>*இடம்,நாள்<br>*பத்தி பிரிப்பு<br>*கருத்து | 5 | புரிதல் | 15 |

# SISHYA SCHOOL,HOSUR

# SISHYA SCHOOL,HOSUR